மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව උතුරු පළාත
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE
செம்மணி வீதி, நல்லூர்
චෙම්මනි පාර, නල්ලූර්
Chemmani Road, Nallur
Web:-www.edudept.np.gov.lk

எனது இல. / මගේ අංකය / My No

உமது இல. / ඔබේ අංකය / Your No

Date: 2023.06.06

வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்விஅலுவலகம்,
தீவகம், கிளிநொச்சி தெற்கு, கிளிநொச்சி வடக்கு, மன்னார், மடு,
முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு.

**சேவையின் தேவை கருதிய இடமாற்றம் - 2023**

கல்விக் கட்டமைப்பின் அத்தியாவசியமானதும் பெறுமதி மிக்கதுமான மனித வளங்களான ஆசிரியர்களை உரிய முறையில் பயன்படுத்துவதனூடாக பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் சிறந்த சேவையை பெற்றுக் கொடுப்பதே கல்வி அமைச்சின் நோக்கமாகும். இந் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளும் முறையின் ஓர் அங்கமான கல்விக் கட்டமைப்பின் ஆசிரியர்களது ஆளணிப் பரம்பலைச் சீராக்கம் செய்வது அத்தியாவசியமானதாகும்.

ஆசிரியர்களின் பரம்பலை சீராக்கம் செய்ய வேண்டியுள்ளதால் யாழ் மாவட்ட கல்வி வலயங்களிலுள்ள வெளிமாவட்ட சேவையை பூர்த்தி செய்யாத ஆசிரியர்களுக்கு சேவையின் தேவை கருதிய இடமாற்றம் வழங்கப்படுகிறது.

இத்தேவையை நிறைவேற்றும் பொருட்டு இணைக்கப்பட்டுள்ள பட்டியலிலுள்ள ஆசிரியர்கள் 2023.06.19 ஆம் திகதி முதல் குறைந்த பட்சம் 03 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தங்கள் வலயத்திற்கு விடுவிக்கப்படுகின்றார்கள்.

தங்கள் வலயத்திற்கு விடுவிக்கப்படும் இவ் ஆசிரியர்களுக்கு, தங்களால் வெற்றிடமுள்ள பொருத்மான பாடசாலையினை வழங்குவதற்கு சிபார்சு செய்யப்பட்டு, எம்மால் அனுமதிக்கப்படும் பட்டியலின் அடிப்படையில் உள்ள ஆசிரியர்களுக்கு பாடசாலையினை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

குறித்த ஆசிரியர்கள் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கும்போது தகுந்த காரணங்கள் இருப்பின் பிற்போடப்படுகின்ற/இரத்துச் செய்யப்படுதற்கான வாய்ப்புக்கள் இருப்பதால் முன்னுரிமை அடிப்படையில் ஆசிரியர் தேவைப்படும் பாடசாலைக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கவும்.

நிபந்தனை அடிப்படையிலான இடமாற்றம், தற்காலிக விடுவிப்பு, சம்பளத்துடனான கற்கை விடுமுறை மற்றும் சம்பளமற்ற விடுமுறைகள் ஏதாவது பெற்றுக் கொள்வாராயின் அக்காலத்தினையும் தங்கள் வலயத்தில் பூர்த்தி செய்த பின்னரே இவர்கள் வருடாந்த இடமாற்ற விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கமுடியும்.

குறித்த ஆசிரியர்கள் தங்கள் மேன்முறையீட்டினை அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் 2023.06.20 ஆந் திகதிக்கு முன்னர் உரிய தொடர்பாடலினூடாக அனுப்பி வைக்கமுடியும். மேன்முறையீட்டின் தகுந்த காரணங்களின் அடிப்படையில் இடமாற்றத்தினை இரத்துச் செய்ய/பிற்போடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

021-224 2800/ 0778759625- PDE
021-224 2801- APDE Admin
021-224 2803- APDE Dev
021-224 2802- APDE Gen Admin
021-224 2804- Chief Accountant
email :- educationnorthern@yahoo.com - Admin
npdeplan@gmail.com- Planning
npedufin@gmail.com - Finance
emisnp@gmail.com -EMIS
npdemgt@gmail.com
021-224 2805 - AO
021-224 2808 - Planning
021-224 2806 - General
021-224 2810 – EMIS
021-224 2807 – Education Admin

அத்துடன் இவர்கள் தமது நிரந்தரப் பாடசாலையில் பொறுப்புக்களை கையளித்து நிரந்தர வலயத்தில் முறைப்படி விடுவிப்பினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இவ்வாசிரியர்கள் கடமையைப் பொறுப்பேற்றதும் அது பற்றி எனக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தி.ஜோண் குயின்ரஸ்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வட மாகாணம்

தி.ஜோண் குயின்ரஸ்
மாகாண கல்விப் பணிப்பாளர்
மாகாண கல்வித் திணைக்களம்
வட மாகாணம்

பிரதிகள்:-

1. செயலாளர் கல்வி அமைச்சு வ.மா – தகவலுக்காக
2. வலயக் கல்விப் பணிப்பாளர், ⎤
3. சம்பந்தப்பட்ட வலயக் கணக்காளர்- ⎦ – உரிய நடவடிக்கைக்காக
4. சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்- - விடுவிப்பதற்காக
5. சம்பந்தப்பட்ட ஆசிரியர் - உரியமுறைப்படி விடுவிப்பினைப் பெற்று புதிய வலயத்தில் கடமையைப் பொறுப்பேற்பதற்காக
6. சுயவிபரக்கோவை

021-224 2800/ 0778759625- PDE
021-224 2801- APDE Admin
021-224 2803- APDE Dev
021-224 2802- APDE Gen Admin
021-224 2804- Chief Accountant
email :- educationnorthern@yahoo.com - Admin
npdeplan@gmail.com- Planning
npedufin@gmail.com - Finance
emisnp@gmail.com -EMIS
npdemgt@gmail.com
021-224 2805 - AO
021-224 2808 - Planning
021-224 2806 - General
021-224 2810 – EMIS
021-224 2807 – Education Admin

**சேவையின் தேவை கருதிய இடமாற்றம் தொடர்பான நிபந்தனைகள்.**

- பெண் ஆசிரியர்களுக்கு 43 வயதினையும், ஆண் ஆசிரியர்களுக்கு 48 வயதினையும் அடிப்படையாகக் கொண்டு வெளி மாவட்டத்திற்கு, யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி (மருதங்கேணி கோட்டம் தவிர்ந்த) வலயங்களைச் சேர்ந்த வெளி மாவட்ட சேவையை ஆற்றாத ஆசிரியர்களை, சேவையின் தேவை கருதி இடமாற்றம் செய்தல்.
- 2022.12.31 இனை அடிப்படையாகக் கொண்டு இந்த வயதெல்லை தீர்மானிக்கப்படும். ஏற்கனவே பிற்போடப்பட்டவர்களுக்கு இந்த வயதெல்லை கருத்திற் கொள்ளப்படமாட்டாது.
- வெளி மாவட்ட சேவைக் காலம் குறைந்த பட்சம் 03 வருடங்கள் (இதன் பின்னர் இடமாற்ற சபையினூடாக இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்).
- உத்தியோகத்தர் அல்லது அவரின் கணவர்/மனைவி/பிள்ளைகள் தாபனக் கோவையில் சொல்லப்பட்ட நோய்களுக்கேற்ப பாதிக்கப்பட்டிருப்பின் அவர்களை இந்த இடமாற்றத்திலிருந்து தவிர்த்துக் கொள்ளல். (உதாரணமாக புற்று நோய், கசம், அங்கக் குறைபாடு, விசேட தேவை ........)
- தீவகம்/வடமராட்சி கிழக்கில் 03 வருடங்கள் சேவை ஆற்றியவர்கள் வெளி மாவட்ட சேவையிலிருந்து விடுவித்தல்.